**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.175 நாள் : 30.05.2026

**சென்னை பள்ளிகள் 04.06.2026 அன்று திறக்கப்படவுள்ளதை முன்னிட்டு, அனைத்து சென்னை பள்ளிகளிலும் மாணவர்களுக்கு பாதுகாப்பான, தடையற்ற மற்றும் கற்றலுக்கு உகந்த சூழலை ஏற்படுத்திடும் வகையில் சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.**

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்**

தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளும் 04-06-2026 அன்று மீண்டும் திறக்கப்படவுள்ளன. இதனை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து சென்னை பள்ளிகளிலும் பாதுகாப்பான, தடையற்ற மற்றும் கற்றலுக்கு உகந்த சூழலை உறுதி செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜூன் மாதம் 4ம்தேதி பள்ளிகள் தொடங்கப்படவுள்ளதை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் உத்தரவிற்கிணங்க, சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்தல், அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி சுத்தம் செய்து பராமரித்தல், மாணவர்கள் பயன்படுத்தும் கழிவறைகளை சுத்தம் செய்தல், நீர் கசிவுகளை சரி செய்தல், வடிகாலில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணியினை உடனடியாக மேற்கொண்டு முடித்திட மண்டல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிகளில் உள்ள அனைத்து மின் விசிறிகள், மின்விளக்கு பொத்தான்கள், மின்சார மணி, மின்னாக்கி உள்ளிட்ட மின் சாதனங்கள் முறையாக பராமரிப்பு செய்திடவும், தேவை இருப்பின் புதிதாக மாற்றிடவும், மின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பள்ளி வளாகங்களில் கொசுக்கள், தேன் கூடுகள், பூச்சுக் கூடுகள் உள்ளிட்டவைகளை பாதுகாப்பாக அகற்றி பூச்சிக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மேற்கொள்ளவும் மாநகராட்சியின் பள்ளிக் கல்வித்துறை மற்றும் மண்டல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்திற்கு உணவு தயாரிக்கும் 38 மைய சமையற்கூடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல், உணவுப் பொருட்கள் இருப்பு அறைகள், சமைக்கும் இடங்கள், வடிகால் பாதைகள் மற்றும் குடிநீர் வசதிகள் ஆகியவற்றை முற்றிலும் சுகாதாரமான முறையில் பராமரித்து தயார்நிலையில் வைத்திடவும், சமைப்பதற்கான எல்பிஜி சிலிண்டர்கள் இருப்பு நிலை மற்றும் பாதுகாப்பாக

இணைக்கப்பட்டுள்ளதையும் சரிபார்த்து உறுதிப்படுத்திடவும், மாணவர்களுக்கு பள்ளி திறந்த முதல் நாளே முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின்கீழ் உணவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் சுய உதவிக் குழு பணியாளர்களை போதுமான எண்ணிக்கையில் மைய சமையற்கூடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளதை உறுதிசெய்யவும். பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னதாக (02-06-2026-க்குள்), இருப்பு அறைகள், சமையலறைப் பகுதிகள், பாத்திரங்கள் மற்றும் எரிவாயு அடுப்புகளை முழுமையாகச் சுத்தம் செய்வதில் அவர்களை ஈடுபடுத்திடவும், மைய சமையற்கூடங்களில் இருப்பில் உள்ள உலர் உணவுப் பொருட்களைப் பரிசோதித்து, காலாவதியான அல்லது தரம் குறைந்த பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்தி, புதிதாக உணவுப் பொருட்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு காலை உணவினை சிறப்பாக வழங்க அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், பள்ளிகள் திறக்கும் நாள் அன்றே பள்ளி மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**